FIRST INFORMATION REPORT

~~முதல் தகவல் அறிக்கை~~

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி தொ பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8120315

1. District : திண்டுக்கல் PS: கொடைரோடு Year: 2026 FIR No.: 07/2026 Date: 17.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: u/s 7(b) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018.

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 11.06.2026 at 18.30 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period -: Time from : Time to : 12.06.2026 at 11.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 17.06.2026 Time : 16.06.2026 at 13.30hrs and 17.30hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் 10.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: நாகலிபட்டி நெல்கொள்முதல் நிலையம், சுமார் 75 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : —
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ரவிசேகர் குமார் (b) Father's/ Husband's Name : தேவேந்திரன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 35 yrs (d) Nationality : இந்தியர் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 2/114, நந்தனாம் தோட்டம், அக்கரைப்பட்டி, நாகலிபட்டி, பழனி தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) சுப்பிரமணி, ஆசிரியர், நெல் கொள்முதல் நிலையம், நாகலிபட்டி, பழனி தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay In reporting by the complainant / Informant: —
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17-06-2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

17/06/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17.06.2026 at 14.00hrs

Name: பெயர்
Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்,
[illegible] மகளிர் மற்றும் சிறார் பிரிவு,
[illegible].

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:7/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 17.06.2026-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திண்டுக்கல் மாவட்டம். பழனிதாலுகா, நரிக்கல்பட்டி அக்கரைப்பட்டி, நந்தவனம் தோட்டம், கதவு எண்.2/114ல் வசிக்கும் திரு.கருப்புச்சாமி மகன் திரு.விக்னேஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 11.00 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். க.விக்னேஷ்குமார், (வயது 35), த/பெ.கருப்புச்சாமி, 2/114, நந்தவனம் தோட்டம், அக்கரைப்பட்டி, நரிக்கல்பட்டி, பழனிதாலுகா, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர். உயர்திரு. காவல் துணைக் கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். M.E., படித்துள்ளேன். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமாக அக்கரைப்பட்டி கிராம சர்வே எண்.129,132 மற்றும் 135ல் சுமார் 8.5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் திருச்சி-1 என்ற குண்டுரக நெல்லினை சுமார் 6 ஏக்கரில் சாகுபடி செய்திருந்தோம். சென்ற மே மாதத்தில் அறுவடை செய்து நெல்லினை வீட்டில் வைத்திருந்தோம். இந்நிலையில் நெல்லை விற்பனைக்கு கொடுப்பதற்காக நரிக்கல்பட்டியில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகிடங்கிற்கு சொந்தமான நெல் கொள்முதல் நிலையத்திற்கு சுமார் 250 மூட்டை நெல்லை கொண்டு சென்று கடந்த 09.06.2026 அன்று இறக்கினோம். அதன்படி நரிக்கல்பட்டி கொள்முதல் நிலைய எழுத்தர் திரு.சுமன்ராஜ் என்பவர் 11.6.2026 மாலை 06.30 மணிக்கு எங்களது நெல்லை எடையினையும் மற்றும் வருவாய் ஆவணங்களை சரிபார்த்து 250 மூட்டை நெல் இருப்பதாகவும், அதனை அரசு நிர்ணயித்த விலையில் பில் எழுதி பணத்தினை வங்கி கணக்கில் செலுத்தவேண்டுமென்றால் ரூ.20,000/- லஞ்சமாக அவருக்கு கொடுத்தால் தான் செய்ய முடியும் என்றார். அதற்கு நான் அவ்வளவு பணம் கொண்டு வரவில்லை என்று தெரிவித்தேன். மறுநாள் வந்து பார்ப்பதாக தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். 12.06.2026 காலை சுமார் 11.00 மணிக்கு நரிக்கல்பட்டியில் உள்ள நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்று அங்கிருந்த திரு.சுமன்ராஜ் அவர்களை சந்தித்து நெல்

கொள்முதலிற்கான பணம் தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் சுமார் 1000 மூட்டை நெல் வந்து பில் போடப்பட்டதாகவும், மேற்கொண்டு பில் எழுத முடியாது என்றும், தெரிவித்தார், அவ்வாறு பில் போடவேண்டும் என்றால் ஏற்கனவே கேட்டவாறு ரூ.20,000/- லஞ்சமாக கொடுங்கள் போட்டுவிடலாம் என்றார். அதற்கு நான் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் அவரது Gpay எண்.7339152373 என்ற எண்ணை கொடுத்து முதலில் ரூ.5,000/- போட்டு விடுங்கள் மீதிப்பணத்தை வங்கிக்கணக்ககில் பணம் ஏறியவுடன் கொடுங்கள் என்றார். இல்லையென்றால் பில் எழுதி பணம் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியாது என்று கூறினார். எனவே நானும் அன்றே மாலை சுமார் 05.28 மணிக்கு அவரது G Pay எண்ணுக்கு என்னுடைய G Pay எண். 7026701026 என்ற எண்ணிலிருந்து ரூ.5,000/- அனுப்பி வைத்தேன். பணம் அனுப்பி விட்டேன் என்று தெரிவித்து அவரது கைபேசிக்கு அழைத்து கேட்டபோது பணம் வந்துவிட்டது என்றார். அதன் பின் எனது சொந்த வேலை காரணமாக கோயம்புத்தூர் சென்று விட்டேன். பின்னர் 15.06.2026 மதியம் 12.27 மணிக்கு திரு.சுமன்ராஜ் அவர்கள் எனக்கு மொபைலில் அழைத்து செக் புக்கை ஸ்கேன் செய்து அவரது Whatsappக்கு அனுப்புமாறு தெரிவித்தார். அதற்கு நான் தற்போது வெளியே இருப்பதால் வீட்டிற்கு வந்துதான் போடமுடியும் என்று கூறினேன். ஆனால் எனது வங்கி கணக்கு விபரங்கள் ஏற்கனவே நெல்கொள்முதல் மையத்தில் கொடுத்துள்ளதால் நெல் கொள்முதல் செய்ததற்கான பணம் ரூ.2,50,000/- ஆனது பழனி ICICI Branchல் உள்ள எனது வங்கி கணக்கு எண்.026901544004க்கு அன்று மாலையே வரவு வைக்கப்பட்டது. அதன் பின்னர் 16.06.2026 அன்று காலையில் இருந்து பலமுறை என்னை திரு.சுமன்ராஜ் அவர்கள் மொபைலில் அழைத்தார். நான் வேலையாக இருந்ததால் எடுக்கவில்லை. எனவே அன்று மதியம் சுமார் 01.30 மணிக்கு எனது வீட்டிற்கு வந்து திரு.சுமன்ராஜ் அவர்கள் என்னை சந்தித்தார். அப்போது அவர் ஏன் போனில் அழைத்தபோது எடுக்கவில்லை என்று கேட்டார். மேலும் மீதிப்பணம் ரூ.15,000/-ஐ கொடுங்கள், பணம் தான் வங்கி கணக்கில் போடப்பட்டுவிட்டதே என்றார். அதற்கு நான் ஒரு ஐந்து நிமிடத்தில் வந்துவிடுவதாக கூறிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். சிறிது நேரம் கழித்து நான் அங்கு சென்றபோது அவர் அங்கு இல்லை. இந்நிலையில் நேற்று பிற்பகல் சுமார் 3.30 மணியளவில் திரு.சுமன்ராஜ் அவர்கள் எங்களது வீட்டின் அருகே உள்ள எங்களுக்கு சொந்தமான வே பிரிட்ஜ் அலுவலகத்திற்கு வந்து அங்கிருந்த பணியாளர் திருமதி.நாகேஸ்வரி அவர்களை

சந்தித்து என்னை குறித்து கேட்டுள்ளார். மேலும் பணத்தை சீக்கிரம் அவருக்கு அனுப்புமாறு தெரிவித்துவிட்டு சென்றுள்ளார். பின்னர் மாலை சுமார் 04.30 மணிக்கு என்னுடைய மற்றொரு மொபைல் எண்.9751260605 என்ற எண்ணில் இருந்து பேசினேன். அப்போது அவரிடம் செல்போனில் Display சரியாக தெரியாததால் போனில் அழைத்தபோது எடுக்கவில்லை என்றும், நேரில் வந்து பேசுகிறேன் என்றும் கூறினேன். அதற்குஅவரும் பழனியில் உள்ள TNCSC குடோனிற்கு வந்து சந்திக்குமாறு கூறினார். நானும் அவ்வாறே மாலை சுமார் 5.30 மணிக்கு பழனியில் உள்ள TNCSC குடோனிற்கு சென்று அங்கிருந்த திரு.சுமன்ராஜ் அவர்களை சந்தித்து பேசினேன். அப்போது அவர் உங்களுடைய பணம் தான் வங்கிகணக்கில் வந்துவிட்டதே, ஏன் இன்னும் தரவில்லை என்றார். அதற்கு நான் செல்போன் Display தெரியததால் பணத்தை GPayல் அனுப்ப முடியவில்லை என்றும், பணத்தை எடுத்து நேரிலேயே கூட தருவதாக தெரிவித்தேன். அதற்கு அவர் நாளை நத்தத்தில் இருப்பேன் என்றும், அதனால் மதியத்திற்கு மேல் அவரது மொபைலில் அழைக்குமாறும் அப்போது அந்த பணத்தை அவரது Gpay எண்ணிற்கோ அல்லது நரிக்கல்பட்டியில் உள்ள விநாயகா ஏஜென்சி மையத்தில் பணத்தை கொடுத்து அங்கிருந்து அவருடைய GPayக்கு பணத்தை அனுப்ப சொல்வதாகவோ கூறுவதாக தெரிவித்தார், அதற்கு நான் அவரிடம் 17.06.2026 அன்று ஒட்டன்சத்திரத்தில் ஒரு கல்யாணம் இருப்பதாகவும், அதற்கு சென்றுவிட்டு போனில் அழைப்பதாகவும், அப்போது கூறியவாறு பணத்தை நேரிலோ அல்லது GPay மூலமாகவோ கொடுத்துவிடுவதாகவும் தெரிவித்துவிட்டு வந்தவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்ததில் திரு.சுமன்ராஜ் அவர்களுக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. நெல்கொள்முதல் செய்தற்கான பணத்தை எனது வங்கி கணக்கில் ஏற்றிவிடுவதற்காக ரூ.20,000/- லஞ்சமாக கேட்டு ரூ.5,000/- முன்பணமாக பெற்றுக்கொண்டு மீதி பணம் ரூ.15,000/-ஐ லஞ்சமாக கேட்கும் நரிக்கல்பட்டி நெல்கொள்முதல் மைய எழுத்தர் திரு.சுமன்ராஜ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இத்துடன் பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளேன். மேலும் இத்துடன் நிலம் தொடர்பான வருவாய் ஆவணங்களையும், ரூ.5,000/- GPayல் லஞ்சமாக கொடுத்ததற்கான Screen Shot நகலையும் இணைத்துள்ளேன். மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (க.விக்னேஷ்குமார், 17.06.2026).

Sir, Received the complaint on 17.06.2026 at 10.00hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.07/2026, u/s.7(b) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 11.00 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 17.06.2026).

Original FIR along with Computer Written complaint of Tr.K.Vigneskumar, Age.35/2026, S/o. Karuppusamy, 2/114, Nandhavanam Thottam, Akkaraipatti Narikalpatti, Palani Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

17/06/26

(P.Palanisamy),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul